பக்கங்கள்:-44

# காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | கார்த்திகை 11 | வெள்ளிக்கிழமை | 28.11.2025 | அதிர்வு 120 |
|---|---|---|---|---|---|

## மோசமான காலநிலையால் 50 பேர் பரிதாப உயிரிழப்பு!

### 25 பேரைக் காணவில்லை

இலங்கை முழுவதும் நிலவும் மோசமான காலநிலை காரணமாக நேற்று இரவு வரை 50 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் பலர் காயமடைந்துள்ளதுடன் 25 பேர் காணாமல்போயுள்ளனர். 06




# கொட்டும் மழைக்கு மத்தியிலும் தாயகத்தில் மாவீரர் நாள் நிகழ்வு

## துயிலும் இல்லங்களில் அலையெனத் திரண்டு கல்லறை மேனியர்களை அஞ்சலித்த உறவுகள்

தாயகக்கனவுடன்சமராடிச்சரித் திரம் படைத்த மாவீரர்களை - கல்லறை மேனியர்களை ஈழத் தமிழர்கள் நேற்று கொட்டும் மழைக்கு மத்தியிலும் உணர்வெழுச்சியுடன் நினைவேந்தினர்.

மாவீரர் துயிலும் இல்லங்களில் பல்லாயிரக்கணக்கான தமிழ் உறவுகள் திரண்டு நின்று காவிய நாயகர்களுக்குச் சுடடேற்றிக் கண்ணீருடன் அஞ்சலி செலுத்தினர். 06






நாட்டில் கடும் மழை.பெரும் வெள்ளம். அதற்கிடையில் இன்னொரு புயல் சீறி வருகின்றது. ஏற்கனவே ஏற்பட்டுள்ள பேரழிவுகளுடன் இனியும் தொடர போகின்ற கடும் மழையால் நிலைமை மிக மோசமடையப் போகின்றது.


போக்குவரத்துக்கும் பெரும் பாதிப்பு. வடக்கு – தெற்கு பயணம் கூட தடைப்படும் சூழ்நிலை. வெள்ளத்தால் தோட்டச் செய்கைகள், நெல் வயல்கள் எல்லாம் பாழாகும் நிலைமை. அடுத்து வரும் வாரங்களில் மரக்கறியிலிருந்து ஒவ்வொரு பொருளும் விலை எகிறும்.

ஆனாலும் மழையாலும் அரசுக்கு ஒரு சாதகம் உண்டு.

இந்தத் தடவை மாவீரர் நினைவேந்தல்களுக்குத் தடையில்லை என்ற செய்தி நேற்று மாவீரர் துயிலும் இல்லங்கள் எங்கும் மக்கள் கூட்டத்தை நிறைய பண்ணியிருக்கின்றது. புலிகளின் காலத்தில் கூட இல்லாத கூட்டம் கோப்பாயிலும், கனகபுரத்திலும், ஆள்காட்டி வெளியிலும் பிற இடங்களிலும் என்கிறார்கள் செய்தியாளர்கள். 06

# உருவாகியது 'டித்வா' புயல்!

## வடக்கு, கிழக்கு மக்கள் மிகவும் அவதானம்



"டித்வா புயலானது வடக்கு வடமேற்கு திசையில் நகர்ந்து வருகின்றது. இது தற்போது மட்டக்களப்புக்கும் அம்பாறைக்கும் இடைப்பட்ட மகா ஓயா பகுதியில் மையம் கொண்டுள்ளது." – என்று யாழ். பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"இந்தப் புயல் தொடர்ந்து வடக்கு வடமேற்கு திசையில் நகரும். தற்போதைய நிலையில் இந்த புயலின் மையப்பகுதி முழுவதும் நிலத்தின் ஊடாகவே நகரும் வாய்ப்புள்ளது. ஆனாலும் நகர்வுப் பாதை இன்னமும் இறுதியாகவில்லை.

இந்த புயலின் மையம் மற்றும் உள்வளையம் ஆகியன வடக்கு மாகாணத்தின் முழுப் பகுதியையும் உள்ளடக்கியே நகரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் தற்போதைய நகர்வின் படி எதிர்வரும் 02.12. 2025 அன்று வட தமிழகத்தில் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது புயலின் மையம் மட்டக்களப்பு மற்றும் அம்பாறையில் உள்ள மையால் இப்பகுதிகளில் ஒரு அசாதாரண அமைதி நிலவும். ஆனால் அது நிலையானதல்ல.

இந்தப் புயலினால் நாடு முழுவதற்கும் நாளை 29 ஆம் திகதி வரை மிகக் கனமழை கிடைக்கும்.

அம்பாறைக்கு இன்று பிற்பகல் முதல் படிப்படியாக மழை குறையும். ஆனாலும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை மழை கிடைக்கும்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு எதிர்வரும் நாளை முதல் மழை படிப்படியாகக் குறைவடையும்.

ஆனால் திருகோணமலை மாவட்டத்துக்கு இன்றும் நாளையும் மிகக் கனமழை கிடைக்கும்.

வவுனியா மாவட்டத்துக்கு இன்றும் நாளையும் மிகக் கனமழை கிடைக்கும். எதிர்வரும் 01.12.2025 அன்றும் வவுனியாவின் பல பகுதிகளுக்கும் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இன்றும் நாளையும் மிகக் கனமழை கிடைக்கும். எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

தற்போதைய நிலைமைகளின்படி மன்னார் மாவட்டத்துக்கு இன்று முதல் எதிர்வரும் முதலாம் திகதி வரை மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. அத்தோடு அனுராதபுரத்தில் கிடைக்கும் கனமழையும் குளங்களின் வான் பாயும் நீரும் ஏற்கனவே குறிப்பிட்டபடி அருவியாற்றின் முகத்துவாரம் மற்றும் கீழ் நீரேந்து பிரதேசங்களில் வெள்ள அனர்த்தத்தை உருவாக்கும்.

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்கள் படிப்படியாக நேற்று இரவு முதல் கனமழை முதல் மிகக் கனமழையை எதிர்கொள்ளும். இது எதிர்வரும் 2 ஆம் திகதி வரை தொடரும்.

தற்போது திருகோணமலை மற்றும் வடக்கு மாகாணத்தில் காற்று மணிக்கு 50-60 கி.மீ. வேகத்தில் வீசுகின்றது. இது இன்று இன்னமும் அதிகரிக்கும்.

இன்றும் தென், ஊவா மற்றும் சப்ரகமுவா மாகாணங்களுக்கு மிகக் கனமழை கிடைக்கும். ஆனால் நாளை பிற்பகல் முதல் மழை படிப்படியாகக் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய மற்றும் மேற்கு மாகாணங்களுக்கு இன்றும் நாளையும் கன மழை முதல் மிகக் கனமழை கிடைக்கும். ஆனால் நாளைமறுதினம் முதல் மேல மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்தில் மழை குறைவடையும்.

இந்தப் புயலின் நகர்வுப் பாதை இதுவரை இல்லாதது போன்று அமையும் எனத் தோன்றுகின்றது. இது அசாதாரணமானது. வடக்கு மாகாணம் முழுவதையும் உள்ளடக்கிய வடக்கு நோக்கிய நகர்வு முற்றிலும் புதியது. 1867 ஆம் ஆண்டு இலங்கையில் முதல் முதலாக நில அளவைத் திணைக்களத்தின் கீழ் விஞ்ஞான முறைகளிலான வானிலை அவதானிப்பு ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை இது போன்ற நகர்வுப் பாதையை எந்த புயலோ, தாழமுக்கமோ கொண்டிருந்ததில்லை. வரலாற்றில் இதுவே முதல் முறை." – என்றார்.

# அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த அரச நிறுவனங்களுக்கு விடுமுறை

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து அரச நிறுவனங்களுக்கும் இன்று விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த முடிவை பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன், நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுகாதார உதவிகளை வழங்குவதற்காக அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் 077 450 66 02 24 மணி நேர ஹொட்லைனை எண்ணை அறிவித்துள்ளது.



# முன்னாள் ஜனாதிபதி மஹிந்த வைத்தியசாலையில் அனுமதி

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வழமையான பரிசோதனைக்காகவே அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று அவரது ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் சுகாதார நிலைமை திருப்திகரமாக இருக்கின்றது என்றும் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.







# தேசிய அனர்த்த முகாமைத்துவ சபை ஜனாதிபதி தலைமையில் கூடியது

தேசிய அனர்த்த முகாமைத்துவ சபை நேற்று இரவு பாதுகாப்பு அமைச்சில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் கூடியது.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலை காரணமாக ஏற்பட்டுள்ள அவசர கால அனர்த்த நிலைமையை கருத்தில் கொண்டு, எடுக்க வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், மக்களின் உயிரைப் பாதுகாப்பதற்கும், நிவாரணப் பணிகளைத் தொடர்வதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு பாதுகாப்புப் படையினருக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று ஆளுங் கட்சி மற்றும் எதிர்க்கட்சி மக்கள் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்தும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக இதுவரை வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை செயல்படுத்துதல் மற்றும் அதன்போது எழுந்துள்ள பிரச்சினைகள், அதற்கான உடனடி தீர்வுகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

மேலும், நீர்ப்பாசன கட்டமைப்பை பாதுகாக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இங்கு விசேடமாக கலந்துரையாடப்பட்டதுடன், அதிக அளவு நீர் தேங்குவதால் குளங்கள் மற்றும் நீர்த் தேக்கங்களின் அணைகள் உடையும்

தொடர்ச்சி▼









# தேசிய அனர்த்த முகாமைத்துவ சபை ஜனாதிபதி தலைமையில் கூடியது

தொடர்ச்சி▲

அபாயம் உள்ளதால், அது பற்றி அவதானம் செலுத்தி நிலைமையை முகாமைத்துவம் செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவுறுத்தினார்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக மாவட்டங்களுக்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி மற்றும் அது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி அதிகாரிகளிடம் கேட்டறிந்ததுடன், தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதுமானது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சூறாவளியின் தாக்கத்தால் கிழக்கு கடற்கரையில் ஏற்படக்கூடிய நிலைமைகள் குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், சூறாவளி மற்றும் மழை காரணமாக அடிக்கடி ஏற்படும் காலநிலை மாற்றங்கள், அனர்த்த நிலைமைகள் மற்றும் ஆபத்தான பகுதிகள் குறித்து புதுப்பிக்கப்பட்ட தகவல்களை பொதுமக்களுக்குத் தெரிவிக்க, தொடர்ந்து ஊடகங்களுக்கு வழங்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

மேலும், சில சமூக ஊடகங்களில் பரவும் போலியான செய்திகள் பொது மக்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்தக்கூடும் என்பதால், சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் போது பொறுப்புடனும் புரிதலுடனும் செயல்பட பொது மக்களை அறிவுறுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டினார்.

அவசர அனர்த்த நிலைமை காரணமாக ஏற்பட்ட வீடுகள் மற்றும் பயிர் சேதங்களுக்கு இழப்பீடு வழங்கும் செயற்பாட்டை திட்டமிடுமாறும் ஜனாதிபதி அனர்த்த முகாமைத்துவத் திணைக்களம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அதன்போது தொடர்ச்சியான பிரச்சினையாக இருக்கும் தகவல் பரிமாற்றத்தில் ஏற்படும் தாமதம் காரணமாக சரியான நேரத்தில் மக்களுக்கு உரிய இழப்பீடு கிடைப்பதில்லை என்றும் இந்த நிலைமையைத் தடுக்க முப்படைகளின் பொறியியல் பிரிவுகளின் உதவியைப் பெறுமாறும் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

மேலும், சேதமடைந்த விவசாய நிலங்களை மீட்டெடுப்பதற்காக வழங்கப்பட வேண்டிய உர மானியங்கள் மற்றும் விதை நெல் வழங்குவதற்கான முறையான திட்டத்தை தயாரிக்குமாறு விவசாய அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேலும் அறிவுறுத்தினார்.

நாட்டைப் பாதித்துள்ள அவசர அனர்த்தம் காரணமாக பிரச்சினைகளை எதிர்கொள்ளும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை திறம்பட வழங்க சுற்றுலா சபைக்கு அறிவுறுத்தியுள்ளதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இந்நாட்டிற்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதன்போது கேட்டறிந்ததுடன், நமது நாடு எதிர்கொண்டுள்ள அவசரகால அனர்த்த நிலைமை மற்றும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட நாடுகளுக்குத் தெளிவுபடுத்த ஒரு குழுவை நியமிக்குமாறும் ஆலோசனை வழங்கினார்.













# யாழ்.மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் 221 குடும்பங்களைச் சேர்ந்த 711 பேர் பாதிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

சீரற்ற காலநிலையால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 221 குடும்பங்களைச் சேர்ந்த 711 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, ஒரு வீடு முழுமையாகவும், 15 வீடுகள் பகுதிகளலும் பாதிப்படைந்துள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜா தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களில் 88 குடும்பங்களைச் சேர்ந்த 275 பேர் நண்பர்கள் மற்றும் உறவினர் வீடுகளில் தங்கவைக் கப்பட்டுள்ளனர்.

2 குடும்பங்களைச் சேர்ந்த 9 பேர் போக்காட்டி அர சினர் தமிழ் கலவன் பாடசாலையில் தங்கவைக்கப்பட் டுள்ளனர். அவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டுள் ளது.

சண்டிலிப்பாய், சங்கானை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், வேலணை, சாவகச்சேரி,பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பகுதிகளில் இதன் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.




அத்துடன் பொன்னாலை பருத்தித்துறையின் ஏ.பி. 019 வீதியின் 50 கிலோமீற்றர் தொடக்கம் 55 கிலோமீற்றர் வரையான பகுதி சேதமடைந்துள்ளதால் பொதுமக்கள் அந்தப் பாதையைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.




## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடும் மழைக்கு மத்தியில் உணர்வெழுச்சியுடன் நினைவேந்தல்கள் இடம்பெற்றன. பல இடங்களிலும் மழை வெள்ளத்தை மீறி மக்கள் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. ஆனால் மழை காரணமாக மக்கள் கூட்டம் தெரியவில்லை. குடைக் கூட்டம் தான் தெரிந்தது.

மக்கள் கூட்டம் தெரிந்திருந்தால் சரத் வீரசேகரா, விமல் வீரவன்ஸ போன்ற பேரினவாதிகளின் – பிரகிருதிகளின் – மரண ஓலம் தெற்கில் இவ்வளவுக்கும் கர்ண கொடூரமாக ஒலிக்கத் தொடங்கியிருக்கும்.

சனக் கூட்டத்தின் தோற்றத்தை கடும் மழையும் குடைத் திரையும் மறைத்து விட்டமையால் தென்னிலங்கையில் பேரினவாதிகளின் ஓலம் குறையும் என்று நம்பலாம். அதனால் கடும் மழையால் அரசுக்கு ஆறுதல்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர்கஜேந்திரகுமார்பொன்னம்பலத்தின் சந்ததியை இழுத்து, பேரினவாதிகள் என்று அமைச்சர் சந்திரசேகரன் நாடாளுமன்றில் குற்றப்பட்டோலை படித்தமையைப் பார்த்தேன்.

அவருக்கு சில விடயங்களை நினைவூட்டுவது பொருத்தம் என்று நினைக்கிறேன்.

பல்லாயிரக்கணக்கில் உயிரிழந்த தமிழ்ப் போராளிகளின் விதைக்கப்பட்ட உடலங்களை புல்டோசர் கொண்டு சிதைத்தழித்த ஒரு கீழ்த்தரமான தரப்பின் பிரதிநிதியாகத்தான் இன்று நாடாளுமன்றில் அவர் இருக்கின்றார் என்பதை அவர் மறக்கக் கூடாது. மனித குல மாண்புகளுக்கு முரணான அந்த அநாகரிகம் – கொடூரம் – காட்டுமிராண்டித்தனம் – மிருகப் பண்பியல்பு – மிலேச்சத்தனம் – நிகழ்த்தப்பட்டமைக்கு இன்று வரை மன்னிப்பு கூடக் கோராத அல்லது அதனைக் கண்டிக்காத ஒரு தரப்பின் பிரதிநிதியாகத்தான் அவர் இன்றும் நாடாளுமன்றத்தில் இருக்கின்றார் என்பதை அவருக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

இன்றும் அந்த மாவீரர்கள் விதைக்கப்பட்ட துயிலும் இல்லங்களில், அவர்களின் உடலங்கள் கிளறி எறியப்பட்ட மண்ணின் மீது, தங்கள் சப்பாத்து கால்களால் மிதித்து கொண்டு நடமாடும் படைத் தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தித் தான் அவர் நாடாளுமன்றத்தில் இருக்கின்றார் என்பதை அவர் மறந்து விடக் கூடாது.

அவர் குறிப்பிட்டபடி அந்த மாவீரர் துயிலும் இல்லங்களை அவரது அரசு நினைவேந்தலுக்காக மக்களுக்கு – அவர்களின் உறவுகளுக்கு – இடம் அளித்து வெளியேறுமா என்பது இன்னும் நம்பக் கூடிய விடயமாக இல்லை. பயங்கரவாத தடைச் சட்டம் நீடிப்பது போல இந்தக் கதையும் பெரும் பம்மாத்தாகத்தான் போகும் என்றுதான் பலரும் நினைக்கிறார்கள்.

முன்னர் 'பயங்கரவாதிகளாக' தெரிந்த புலிகள், இப்போது மாகாண சபை தேர்தல்களிலும் தமிழ் மக்களின் வாக்குகளை சுருட்டுவதற்காக 'தமிழ்ப் போராளிகளாக'த் தெரிகிறார்கள். அப்படி நிரந்தரமாக அவர்கள் போராளிகளாக அமைச்சர் சந்திரசேகரனுக்கும் அவரது தோழர்களுக்கும் தெரிந்தால் ரொம்ப சந்தோசம்.

நல்லாட்சி அரசிலும் முதல் இரண்டு வருடங்கள் மாவீரர் தின நினைவேந்தலுக்கு தடை இருக்கவில்லை. ஆனால் பின்னர் நிலைமை தலைகீழாகிவிட்டது.

இப்போதும், மாவீரர் தின அனுஷ்டிப்புக்கு வழங்கப்பட்ட தாராளம் மாகாண சபை தேர்தல் முடிந்ததும் பறிபோய் விடுமா என்பதும் தெரியவில்லை.

மாவீரர்களின் வித்துடல்கள் புதைக்கப்பட்ட பிரதேசங்களை – நடு கற்களை – புல்டோஸர்கள் கொண்டு உழுது, நாசமாக்கி அங்கு படை முகாம் அமைத்து நடத்திய வெறியாட்டத்திற்கு மன்னிப்பு கோரி, அந்த முகாம்களை விட்டு படையினரை வெளியேற்றி, நிரந்தர நினைவேந்தலுக்கு இடமளித்து, அந்தத் திராணியோடு அமைச்சர் சந்திரசேகரர் வடக்கே வந்து நிற்பாராயின் இன்னொரு தலைவராக அவர் நிச்சயம் மதிக்கப்படுவார். அந்தக் காலம் வருமா? பார்த்திருப்போம்!



## பாலம்போட்டாறு பத்தினியம்மன் ஆலயம் நேற்று மாலையில் வெள்ளத்தில் மூழ்கியது

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, பாலம்போட்டாறு பத்தினியம்மன் ஆலயம், பெய்து வரும் கடும் மழை மற்றும் வெள்ளத்தில் நேற்று மாலை மூழ்கியது.

## முல்லைத்தீவு முத்தையன்கட்டுக் குளத்தின் வான் கதவுகள் இன்று திறக்கப்படவுள்ளன

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகப் பெரிய குளங்களில் ஒன்றான முத்தையன்கட்டுக் குளத்தின் வான் கதவுகள் இன்று திறக்கப்படவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன்கட்டு குளத்திற்கான நீர் ஏந்துப் பகுதியில் தொடரும் அதிகரித்த மழையின் காரணமாக குளத்திற்கான நீர் வரத்து மிக வேகமாக அதிகரித்துள்ளது.

இவ்வாறு அதிகரித்த நீர் வரத்தின் காரணமாக 21 அடி கொள்ளவைக் கொண்ட குளத்தில் தற்போது நீர் 17 அடியை தாண்டி விட்ட காரணத்தால் இன்றைய தினம் (28 ஆம் திகதி) குளத்தின் வான் கதவுகள் திறக்கப்படவுள்ளன என மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

## மோசமான காலநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடு முழுவதும் பெய்யும் கனமழை, வெள்ளம், பலத்த காற்று மற்றும் மண்சரிவுகளால் பல்லாயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பதுளை மாவட்டமே பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளது. இந்த மாவட்டத்தில் கடந்த 48 மணிநேரத்தில் பெய்த அடைமழை மற்றும் மண்சரிவு உள்ளிட்ட அனர்த்தங்களால் 31 பேர் உயிரிழந்துள்ளதுடன் 7 பேர் காணாமல்போயுள்ளனர்.

## கொட்டும் மழைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் இம்முறை சுமார் 30 மாவீரர் துயிலும் இல்லங்களில் பிரதானமாக அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன. தவிர, தனி மாவீரர் நினைவிடங்கள், உள்ளூராட்சி சபைகள், அரசியல் கட்சிகளின் பணிமனைகள் மற்றும் தனிநபர்களால் அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலயங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த வருடம் வழக்கத்திலும் பார்க்க அதிகளவான இடங்களில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

மாலை 6.05 மணிக்கு மணி ஓசை எழுப்பப்பட்டு, தொடர்ந்து அகவணக்கம் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து மாவீரர்களுக்கான பிரதான பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. சமநேரத்தில் ஏனைய சுடர்களும் ஏற்றப்பட்டு தமிழ் உறவுகள் கண்ணீர் சொரிந்து உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் நினைவேந்தலை அனுஷ்டித்தனர்.

இது தவிர புலம்பெயர் தேசங்களிலும் தமிழர்கள் அதிகம் வாழும் பிரதேசங்களில் விசேடமாக அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலயங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன.

# திட்டமிட்ட பேரினவாதக் குடியேற்றங்களாலேயே தமிழர்களின் விடுதலைப் போராட்டம் முகிழ்ந்தது

## நாடாளுமன்றத்தில் மாவீரர்களை அஞ்சலித்து சாணக்கியன் உரை




இன்று கார்த்திகை 27. மாவீரர் தினம். இவ் வாரத்தில் எம் தமிழ் மண்ணுக்காகவும், மண்ணின் விடுதலைக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் தம் உயிர் துறந்த மாவீரர்களுக்கு இச் சபையிலே என் அஞ்சலிகள். போராட்ட வடிவம் மாறலாம் என்றும் எமது மக்களின் விடுதலைக்கான சிந்தனை செயல் மாறாது. எமது பிரதேசங்களில் சிங்கள மக்களைத் திட்டமிட்டுக் குடியேற்றியமை காரணமாகவே, அதற்கு எதிராக தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஆரம்பமாக அது காரணமாகியது.

– இவ்வாறு நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்.

வரவு – செலவுத் திட்டத்தில் மகாவலி மற்றும் நீர்பாசனம் தொடர்பான அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழு நிலை விவாதத்தில் நேற்றைய தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

தேசிய மக்கள் சக்தியின் இரண்டாவது வருட ஆட்சியிலே மாவீரர் தினம் இரண்டாவதாக வந்திருக்கின்றது. இந்த வருடத்திலே வடக்கு, கிழக்கு முழுவதும் சுதந்திரமான முறையில் மாவீரர் தினத்தை எவ்வித தடையுமின்றி அனுஷ்டிக்க இந்த அரசாங்கம் அனுமதி வழங்கியமைக்கு என் நன்றிகள். இழந்த எம் உறவுகளை நினைவு கூரும் முகமாக பல நிகழ்வுகளை நடத்திக்கொண்டு இருக்கின்றார்கள் எம் தமிழ் மக்கள்.

முதல் இரண்டு வருடங்கள் மாவீரர் தினத்தை நினைவு கூர அனுமதி வழங்கிய முன்னைய அரசாங்கங்கள் அடுத்த இரு வருடங்களிலே மாவீரர் தினத்தை நினைவு கூர முன்னின்று உழைத்தவர்களை இனங்கண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற பல்வேறு சட்டங்களினூடாக கைது செய்வதனை கண்ணூடே காண முடிந்தது. தேசிய மக்கள் சக்தியின் செயற்பாடுகளும் இதே போன்று அமையக்கூடாதெனும் வேண்டுகோளை இவ்விடத்திலே முன்வைக்கின்றேன்.

நீர்ப்பாசன திட்டங்கள், விவசாயம், மாகாவலி போன்ற அமைச்சின் முக்கிய விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எமது விடுதலைப் போராட்டம் என்ற ஒன்று பல்லாயிரம் மாவீரர்களை மண்ணிலே விதைத்தமைக்கான முக்கிய காரணம் அன்றைய காலப்பகுதியில் ஆட்சியாளர்கள் செய்த இத்தகைய முன்னேற்றத் திட்டங்கள். நீர்ப்பாசனத் திட்டங்களை முன் காட்டியே மறைமுகமாக குடியேற்றத் திட்டங்களை ஏற்படுத்தினர். அம்பாறை என்ற மாவட்டமே இல்லாத போது சேனநாயக்க திட்டம், கல்லோயா திட்டம் என்பவற்றினூடாக விகிதாசாரத்தை மாற்றியமைக்கச் செய்தனர். இப்படி மக்களைக் குடியேற்றிய சம்பவத்தினூடாகவே விடுதலைப் போராட்டம் ஆரம்பமாக அது காரணமாகியது. மாவீரர்கள் தனி நாட்டிற்காக போராடினர். அவர்களின் தியாகங்களுக்கு மக்கள் பிரதிநிதியாக நாங்கள் நீதி வழங்குவதாக இருந்தால் அரசியல் தீர்வொன்றினை பெற்றுக் கொடுப்பதே அதுவாகும். நாடாளுமன்ற அமர்வுகள் நடத்தப்பட்ட போதும், மாவீரர் நிகழ்வுகளை ஏற்படுத்த தடை விதித்தமைக்கு எதிராக களத்தில் நின்று போராடினோம். 2023 ஆம் ஆண்டு தரவை துயிலும் இல்லத்தில் அஞ்சலிக்காக சென்ற போது பொலிஸார் அங்கு வந்து பதாதைகளை கழற்றி, வயது முதிர்ந்த தாய்மார்களை தாக்கி அங்கிருந்தவர்களை கைது செய்தனர்.

இவ் விவாதத்திலே எம் மாவீரர்களின் அபிலாசைகளை நிறைவேற்ற இந்நேரத்தை பயன்படுத்திக் கொள்கின்றேன். எங்கள் மண்ணே எங்கள் சொத்து.

கே.டி. லால் காந்த அவர்களின் அமைச்சே எமது நிலங்களை பறிமுதல் செய்வதில் முக்கியமாக செயற்படும் அமைச்சு. உங்கள் அமைச்சுக்கு கீழுள்ள மகாவலி அதிகார சபையானது இன்று மகாவலி திட்டத்தினூடாக நீரை வழங்காது ஆனால் நிலங்களை மட்டும் பறித்துக் கொண்டு இருக்கின்றன. மகாவலி திட்டத்தினூடாக 1,200 ஏக்கர் காணியை மேய்ச்சல் தரைக்கு வழங்குவதாக அமைச்சர் கூறினார். 750 நாள்களுக்கும் மேலாக போராடிக் கொண்டிருக்கும் மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைப் பண்ணையார்கள் 1,200 ஏக்கரை பெறுவதற்காக அல்ல, தாம் பயன்படுத்திய தமது 7,000 ஏக்கர் காணியை பெறவே போராடுகின்றார்கள். 5 இலட்சத்துக்கு மேல் கால்நடைகளை வைத்திருக்கும் பண்ணையார்களுக்கு கட்டாயம் அவர்களது 7,000 ஏக்கர் காணி தேவை.

வடக்கு, கிழக்கில் முக்கிய பொருளாதார நடவடிக்கைகள் மீன்பிடி, கால்நடை, விவசாயமே. மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்தவரையில் கால்நடை வைத்திருப்போருக்கு நீதி இன்னும் வழங்கப்படவில்லை. ஆனால் வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை போன்ற மாவட்டங்களில் மகாவலி எல் வலயத்தின் கீழ் அதிக நிலங்களை வேற்று பிரதேசங்களில் இருந்து வருவோருக்கு வழங்கி குடியேற்றத் திட்டங்கள் நடைபெறுகின்றன. இவ்வாறான விடயங்களினாலேயே 30 வருட ஆயுதப் போராட்டம் நடைபெற்றது.

எமது பிரதேசங்களில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் முன்னாயத்தமாக இருந்திருக்க வேண்டும். மலைநாட்டிலே இருந்து வரும் நீரானது கடலுடன் சேர்வது எமது மாவட்டத்திலேயே ஆகும். மகாவலி திட்டத்தின் மூலம் கொத்மலை எனும் பிரதேசத்தில் 5 இற்கும் அதிகமான நீர்த்தாங்கிகள் அமைத்தால் மாத்திரமே அப் பிரதேசத்தில் வரும் வெள்ளம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படும். ஏற்கனவே கட்டப்பட்ட குளங்களின் நீர்மட்டம் அதிகரித்தாலும் ஒரு திட்டமிடல் இன்றி நீரானது திறந்துவிடப்படுவதால் எம் மாவட்டம் நீரில் மூழ்குகின்றது.

அனுபவமில்லாத மாவட்டப் பிரதிநிதிகள் வெள்ளம் வரும் வரை கொழும்பில் இருந்துவிட்டு வெள்ளம் வந்த பின் மட்டக்களப்பு சென்று அனர்த்த முகாமைத்துவத்தை மேற்கொள்ள முடியாது. கடந்த கால வெள்ளத்தில் சிக்குண்ட மக்களை எமது வாகனங்களைக் கொண்டே மீட்டோம். அன்று தான் இந்த நிலை என்றால் இன்றும் அதே அசமந்த நிலை. வெள்ளத்தில் பட்டினியால் வாடும் மக்களுக்கு எனது செலவில் நூடில்ஸ் வாங்கி கொடுத்த போது அப்போதிருந்த அபிவிருத்திக் குழுத் தலைவர் அருண் அவர்கள் அதற்கான பணம் அரசாங்கத்தினால் உங்களுக்கு வழங்கப்படும் என்றார். ஆனால் இதுவரை அது கிடைத்தபாடில்லை. இதை ஓர் உதாரணமாகவே கூறுகின்றேன். இந்த பணத்தை எதிர்பார்த்து நான் என் மக்களுக்கு உதவிகள் புரியவில்லை. இம் முறையும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்னால் இயன்ற உதவிகளை வழங்குவேன். அரசு செய்யாது என்று எமக்கு தெரியும்.

கடந்த காலங்களில் பின்பற்றப்பட்ட அதே முறை மீண்டும் பின்பற்றப்படுமாயின் மட்டக்களப்பு விவசாயிகள் பாரிய நட்டத்தை சந்திக்க நேரிடும். வெள்ளம் வந்தால் காப்புறுதியாளர்கள் மட்டக்களப்பிற்கு வருகை தந்து சேதத்திற்கு உள்ளாகாத பிரதேசங்களை மேலோட்டமாக பார்வையிட்டுவிட்டு 20 வீதம் சேதமடைந்திருந்தால் ரூபா 8,000 என்று ஏதோவொரு தொகையை கூறிவிட்டு சென்றுவிடுவர். இந்த அரசாங்கம் இம்முறையாவது விவசாயிகளுக்கு தகுந்த முறையில் நட்ட ஈட்டினை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மட்டக்களப்பிலே காணப்படும் நான்கு குளங்கள், அம்பாறை சேனநாயக்க சமுத்திரம் ஆகியவற்றை சிறப்பாக முகாமை செய்யும் போது நான்கு போகம் வயல் செய்யக்கூடியதாக இருக்கும். கண்டியனாறு குளம் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொண்டு அறிக்கைகள் சமர்ப்பித்தோம். இக் குளத்தையும், பனிச்சங்கேணியையும் வெகுவிரைவில் செய்து தருகின்ற போது விவசாய நிலங்களை எம்மால் பாதுகாக்க முடியும். பிரெஞ்சு அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட நீர்த் திட்டம் பொருளாதார நெருக்கடி காரணமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாகவும் கருத்திலெடுக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன். – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## புரிந்துணர்வு சாத்தியமா?

தேசிய இனப் பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய - நின்று, நிலைத்து, நீடிக்கத்தக்க - தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்ற தரப்புகள் எல்லாம் நல்லிணக்கம், புரிந்துணர்வு பற்றியும் அதிகம் பேசுகின்றமை வழமை.

நல்லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்படாமல் நிலையான தீர்வு சாத்தியம் இல்லை. புரிந்துணர்வுக்கு - நல்லிணக்கம் ஏற்படுவதற்கு - எது முக்கியம்?

கடந்த கால தவறுகள், பிழைகள், குற்றங்கள், அடாவடித்தனங்கள், அட்டூழியங்கள் போன்றவற்றை மறந்து இனங்களுக்கிடையில் நம்பிக்கையும் நல்லுறவும் கட்டியெழுப்பப்பட வேண்டுமானால் அதற்கு எது முக்கியம்?

இவைதான் இன்று நம் முன் உள்ள பிரதான கேள்விகள்.

கடந்த கால குற்றங்களையும் தவறுகளையும் அடாவடித்தனங்களையும் படுகொலைகளையும் மூடி மறைத்து விட்டு அவற்றின் மீது நல்லிணக்கத்தையோ புரிந்துணர்வையோ கட்டி எழுப்ப முடியாது.

முதலில் உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான விடயங்கள் அம்பலமாக வேண்டும். அவை தொடர்பில் தண்டனை கொடுப்பது இரண்டாவது விடயமாக இருக்கலாம். ஆனால் உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

நேற்று தமிழர் தேசம் கொட்டும் மழைக்கு மத்தியிலும் தங்களின் மாவீரர்களை உணர்வெழுச்சியுடன் நினைவு கூர்ந்தது. அந்த நினைவு கூரலுக்கு தற்போதைய அரசாங்கம் அனுமதி அளித்திருந்தாலும், அந்த நினைவு கூரலினிடையே தமிழர் தம் மனதை இடருகின்ற - நெருடுகின்ற - ஒரு விடயம் சிந்திக்கப்பட வேண்டியதாக இருக்கின்றது.

உயிரிழந்த தங்கள் உறவுகளுக்காக நினைவேந்தும் உரித்து மக்களுக்கு உண்டு. அது அவர்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்று. அதனை இதுவரை காலமிருந்து வந்த பௌத்த - சிங்களப் பேரினவாத அரசுகள் தடுத்திருந்தன. நல்லாட்சி அரசில் ஆரம்பத்தில் இரண்டு வருடங்கள் அதற்கு அனுமதி அளிக்கப்பட்ட போதிலும், பின்னர் நினைவேந்தல்கள் 'பயங்கரவாத செயல்களாக' அடையாளப்படுத்தப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இப்போதைய அரசும் இதனை எவ்வளவு காலத்துக்கு அனுமதிக்கும் என்பது கேள்விக்குறிதான். ஆயினும் கடந்த ஆண்டும், இவ்வாண்டும் இந்த அரசும் அனுமதித்திருப்பது வரவேற்கத்தக்கதுதான்.

ஆனால் மாவீரர்களின் வித்துடல்கள் புதைக்கப்பட்ட எல்லா மாவீரர் துயிலும் இல்லங்களும் சிங்கள - பௌத்த பேரினவாதிகளின் காட்டுமிராண்டித்தனமான செயல் மூலம் நிர்மூலமாக்கப்பட்டிருக்கின்றன. அத்தோடு அவை படை முகாம்களாக்கப்பட்டு மாவீரர்கள் நிந்திக்கப்படும் அலங்கோலம் - அவலம் - தொடர்ந்து கொண்டிருக்கின்றது. நேற்றைய நினைவு நிகழ்வில் ஒவ்வொரு தமிழனின் மனதையும் மிக மோசமாக நெருடிக் கொண்டிருந்த விடயம் அதுதான்.

உயிரிழந்தவர்களின் புதைகுழிகளைக் கூட புல்டோசர் கொண்டு சிதைத்தழித்த கொடூரம் மனித குல வரலாற்றில் மிக மோசமான காட்டுமிராண்டித்தனம். அத்தகைய காட்டுமிராண்டித்தனமான - கேவலமான - அநாகரிகமான - மிலேச்சத்தனமான - செயலுக்காக தென்னிலங்கைச் சிங்களம் குறைந்தபட்சம் தமிழர் தேசத்திடம் ஒரு மன்னிப்புக் கூட கோரவில்லை.

அத்தகைய கொடூரவாதிகள் தரப்பிடம் இருந்து நினைவேந்தலுக்கு அனுமதி கிடைத்த விடயத்தைக் கொண்டாடுவதற்கு எதுவும் இல்லை.

உயிரிழந்தவர்களின் புதை குழிகளை புல்டோசர் கொண்டு உழுது, சீரழிப்பது என்பது மனித நாகரிகத்துக்கு ஒவ்வாத மிருகத்தனம். காட்டுமிராண்டித்தனமான செயல். அத்தகைய நடவடிக்கை மேற்கொண்ட தரப்போடு, அதற்காக - அந்த மிக மோசமான இழி செயலுக்காக - இது வரை மன்னிப்புக் கூடக் கேட்காத தரப்போடு நல்லிணக்கமும் புரிந்துணர்வும் சாத்தியமா என்பது நினைத்துப் பார்க்கக் கூட முடியாத விடயமாகவே இருக்கிறது.







# கிட்டங்கி தாம்போதியை ஊடறுத்துப் பாயும் வெள்ளம் ஆற்று வாழையை அகற்றும் நடவடிக்கை முன்னெடுப்பு

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம் கல்முனை – நாவிதன்வெளி பிரதான சாலையை இணைக்கும் கிட்டங்கி தாம்போதியை ஊடறுத்து பாயும் வெள்ளநீரின் அளவு அதிகரித்ததனால், அப்பகுதியில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

வெள்ளநீருடன் பெருமளவில் தேங்கி வரும் சல்வீனியா எனும் ஆற்று வாழை பாலப்பகுதியில் சிக்கித்தங்கி, நீரின் ஓட்டத்தையும் வாகனப் போக்குவரத்தையும் முடக்கி வருகிறது. இதன் மூலம் பொதுமக்கள் தமது பயணங்களில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். தற்போது மட்டுப்படுத்தப்பட்ட படகு சேவை மூலம் மட்டுமே மக்கள் இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதையடுத்து, நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர் இந்திரன் ரூபசாந்தனின் வழிகாட்டலின் கீழ், பிரதேச சபை செயலாளர் நேரடி மேற்பார்வையில், கனரக ஜே.ஸி.பி. இயந்திரம் பயன்படுத்தி ஆற்றில் தேங்கியுள்ள ஆற்று வாழைகளை அகற்றும் பணிகள் விரைந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வெள்ளநீர் தணியும் வரை மற்றும் அகற்றும் பணிகள் முழுமையாக நிறைவடையும் வரை பொதுமக்கள் தேவையற்ற பயணங்களை தவிர்க்குமாறு பிரதேச சபை தவிசாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். சவளக்கடை பொலிஸாரும் கடற்படையினரும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

# கொலை வழக்குக்காக பஸ்ஸில் சென்றவர்களை வழிமறித்து முகமூடிக் கும்பல் சரமாரி வாள்வெட்டு

## ஆறு பேருக்குப் படுகாயம் ஈச்சிலம்பற்றில் கொடூரம்

(எஸ்.கீதபொன்கலன்)

ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலங்கைத்துறைப் பகுதியில் நேற்றுக் காலை பஸ் ஒன்றை மறித்து குழு ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட சரமாரி வாள் வெட்டுத் தாக்குதலில் பஸ்ஸில் பயணித்த 6 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் மூதூர் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இலங்கைத்துறையில் இருந்து மூதூர் நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றே இலங்கைத்துறை சந்தியில் வைத்து வழிமறிக்கப்பட்டு அதில் பயணித்தவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் மூதூர் நீதிமன்றில் உள்ள வழக்கு ஒன்றிற்காக பயணித்த 5 பேரும் பஸ்ஸின் உதவியாளருமே படுகாயமடைந்துள்ளனர்.

முகத்தை மறைத்து கொண்ட 15 இக்கும் மேற்பட்ட அடையாளம் தெரியாத நபர்களினால் இந்த பஸ் இலங்கைத்துறைச் சந்தியில் வைத்து வழிமறிக்கப்பட்டுள்ளது.

அதனை அடுத்து அவர்கள் பஸ்ஸின் சாவியைப் பிடுங்கிக் கையில் எடுத்துக் கொண்டு வாள் மற்றும் கோடரிகளை பயன்படுத்தி பஸ்ஸில் இருந்த – வழக்கிற்காக சென்றவர்கள் – மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இத்தாக்குதலின் போது பஸ்ஸின் உதவியாளரும் படுகாயமடைந்துள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த 6 பேரும் மூதூர் வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக சேர்க்கப்பட்ட நிலையில் பின்னர் அதில் ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

2024.04.03 அன்று இடம்பெற்ற ராசா என்பவரின் கொலை தொடர்பான வழக்கின் தவணைக்காக நேற்றைய தினம் வழக்குடன் தொடர்புடைய நபர்கள் நீதிமன்றத்திற்குச் சென்ற நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் வழக்குடன் தொடர்புடைய கந்தையா கமலதாசன் (வயது 45), கமலதாசன் கதுர்ஷன் (வயது 24), கமலதாசன் கஜேந்திரன் (வயது 27), இராசகிசாந்த் (வயது 22), முகமட் பாயிஸ் விதுர்ஷன் (வயது 19) ஆகியோரும் பஸ்ஸில் உதவியாளராக கடமையாற்றிவந்த கே.ஜெயந்தன் (வயது 23) என்பவருமே படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

தாக்குதலை நடத்திய எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




# அனைத்து முன்பள்ளிகளும் இன்று முதல் மூடப்படுகின்றன

நாட்டில் நிலவும் அதிதீவிரமான வானிலை மற்றும் அனர்த்த நிலைமைகள் காரணமாக, இன்று முதல் மறு அறிவித்தல் வரை அனைத்து முன்பள்ளிகளும், முன்பிள்ளை பருவ அபிவிருத்தி நிலையங்களும் மூடப்படவுள்ளன என என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனர்த்த நிலைமைகள் தணிந்த பின்னரே, முன்பள்ளிகள் மீண்டும் திறக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் ஊடகப் பிரிவின் ஊடாக முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம் வெளியிட்டுள்ளது.

# வீட்டின் மேல் மாடியில் சிக்கியிருந்த மூவர் மீட்பு




தெதுறு ஓயா பெருக்கெடுத்தமையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கித் தவித்த மூன்று பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

விமானப் படையின் ஹெலிக்கொப்டர் மூலம் அவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

மஹாவ எல்ல பிரதேசத்தில் தங்களது வீடு வெள்ளத்தால் சூழப்பட்டமையினால் இரண்டு மாடி வீடு ஒன்றின் மேல் தளத்தில் சிக்கியிருந்த அவர்கள் மூவரும், இலங்கை விமானப் படையைச் சேர்ந்த பெல்-212 ரக ஹெலிக்கொப்டர் மூலம் மீட்கப்பட்டனர் என விமானப்படை தெரிவித்துள்ளது.

# பேராறு குளத்தின் வான் கதவு திறப்பு பறங்கி ஆறு பெருக்கெடுக்க வாய்ப்பு

## மாந்தை மேற்கு பிரதேச மக்களை அவதானமாக இருக்க வேண்டுகோள்







(மன்னார் நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை காரணமாக "பேராறு" குளத்தின் வான் கதவு ஒன்று நேற்றைய தினம் திறக்கப்பட்டுள்ளது. எனவே வான் பாயும் வெள்ளம் மன்னார் மாவட்டத்தின் பறங்கி ஆறு ஊடாக பெருக்கெடுக்க வாய்ப்புள்ளது என மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக பேராறு குளத்தின் வான் கதவுகள் மேலும் திறக்கப்படுவதற்கான வாய்ப்புள்ளதாக எதிர் பார்க்கப்படுகின்றது.

இப்படி வான் பாயும் நீர் மன்னார் மாவட்டத்தின் பறங்கி ஆறு ஊடாக பெருக்கெடுக்க வாய்ப்புள்ளது.

எனவே பறங்கி ஆற்றின் தாழ் நில பிரதேசங்களில் வாழும் மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் மேய்ச்சல் தரைக்காக கால்நடைகளை கொண்டு சென்ற பண்ணையாளர்கள் தங்களின் பாதுகாப்பு கருதி பாதுகாப்பான இடங்களை நோக்கி நகருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் தங்களின் பாதுகாப்புக் கருதி திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தொடர்பில் இருக்குமாறும் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# கலா ஓயா தாழ்நிலப் பகுதியில் பாரிய வெள்ள அபாய நிலை



கலா ஓயா ஆற்றின் தாழ்நிலப் பகுதிகளுக்கு பாரிய வெள்ள அபாய நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

கலாவெவ நீர்த்தேக்கத்திலிருந்து விநாடிக்கு 44,000 கன அடி நீர் இராஜங்கனைக்கு விடுவிக்கப்படுவதுடன், அங்கிருந்து மேலும் 35,000 கன அடி நீர் கலா ஓயாவுக்குள் மீண்டும் வெளியேற்றப்படவுள்ளதால் இந்த அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால், இராஜங்கனை, நொச்சியாகம, வண்ணாத்திவில்லு மற்றும் கருவலகஸ்வெவ ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளின் தாழ்நில பகுதிகளில் அடுத்த சில மணி நேரங்களில் பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே, இந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மற்றும் அப்பகுதியினூடாகப் பயணிக்கும் சாரதிகள் அனைவரும் நிலைமை குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு நீர்ப்பாசன திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

அத்துடன், நீர் மட்டம் உயர வாய்ப்புள்ளதால், பாலம் போன்ற இடங்களில் உள்ள மக்கள் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும், கலா ஓயாவை அண்மித்த பகுதிகளில் உள்ள அனைத்து செயற்பாடுகளையும் தவிர்க்குமாறும் அந்த திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.









# கல்முனைப் பிரதேசத்தில் வீதியை தாண்டிய கடல்!

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனைப் பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை கடல் கொந்தளிப்பு காரணமாக சீறி எழுந்த அலைகள் வீதியை தாண்டி ஊருக்குள் போக முற்பட்டன.

மீனவர்கள் தமது படகுகளை அவசர அவசரமாக பாதுகாப்பாக அப்புறப்படுத்தினர்.

கல்முனையின் கரையோர கடல் பகுதிகளில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதனால் மக்கள் அச்சத்தில் உறைந்து போய் உள்ளனர்.

குறிப்பாக பெரியநீலாவணை, மருதமுனை, கல்முனை போன்ற கரையோரப் பகுதிகளில் கடல் கொந்தளிப்பு நிலையில் காணப்படுகிறது.

கடல் அலைகளின் சீற்றம் காரணமாக வீதீகளில் கடல் அலை பரவுவதோடு கடல் அரிப்பும் பாரியளவில் இடம்பெறுகிறது.

மீனவர்களது. மீன்பிடி படகுகள் யாவும் வீதிக்கு இழுக்கப்படுகின்றன. கடல் பகுதிகளை பார்வையிடச் செல்லும் மக்கள் அவதானத்துடன் நடந்து கொள்ளுமாறு பெரிய நீலாவணைப் பொலிஸார் மக்களை அறிவுறுத்துகின்றமையைக்காணக்கூடியதாக இருந்தது. நேற்று கல்முனையில் மழை சற்று குறைந்திருந்தாலும் காற்றின் வேகம் சற்று அதிகமாகவே காணப்படுகிறது. வெள்ள நிலையும் தொடர்கிறது. மக்களது இயல்பு நிலை முற்றாக சீர்குலைந்துள்ளது.























# பொகவந்தலாவையில் மண்சரிவு, வெள்ள பெருக்கு

(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)

மலையகத்தில் தொடரும் சீற்ற கால நிலை காரணமாக பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் மேல்பிரிவு தோட்டப் பகுதியில் உள்ள தொடர் லயன்குடியிருப்புக்கு பின்னால் உள்ள பாரிய மண்மேடு ஒன்று நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சரிந்து விழுந்துள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குடியிருப்புக்குப் பின்னால் இருந்த மண்மேடு சரிந்து விழுந்துள்ளதோடு மூன்று குயிருப்புகளை சேர்ந்த 23 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை இந்தக் குடியிருப்புக்கு பின்னால் மேலும் ஒரு பாரிய மண்மேடு சரிந்து விழும் அபாயம் காணப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்

அங்கு பாதிக்கப்பட்ட மக்கக் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு, பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பப்பட உள்ளனர் என பிரதேசத்திற்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இதேவேளை காசல்ரீ நீர் தேக்கத்திற்கு நீர் ஏந்தி செல்லும் பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் மத்திய பிரிவு பகுதியில் உள்ள கிளை ஆற்றில் வெள்ள நீர் அடிக்கடி பெருக்கெடுக்கின்றமையால் அப்பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், வாகன சாரதிகள் எனப் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆற்றை ஆழப்படுத்தி தருமாறு பிரதேச மக்கள் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதேவேளை ஹட்டன் – பொகவந்தலாவ பிரதான வீதியின் டியன்சின் பகுதியில் கற்பாறை மற்றும் மண்மேடு சரிந்து விழுந்துள்ளது. இதேவேளை அந்த பகுதியில் சரிந்து விழும் அபாயத்தில் இரண்டு மரங்கள் காணப்படுகின்றன. இதனால் அந்த்ச் வீதியின் ஊடாக பயணிக்கும் வாகன சாரதிகள் மிக அவதானமாக வாகனத்தை செலுத்துமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்தோடு பெய்து வரும் கடும் மழையின் காரணமாக பொகவந்தலாவ டியன்சின் பகுதியில் உள்ள மரக்கறிப் பண்ணையும் வெள்ள நீரினால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.















# திருமலையில் 7,376 பேருக்குப் பாதிப்பு

Disaster Summary Report- 25.11.2025-27.11.2025/ 12.30p.m Heavy Rain/ Flood/ High Wind

| Division | Affected | | House Damaged | Own House & Relative house | | No | Safety Center | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Families | Persons | | Families | Persons | | Families | Persons | Safety Center Name |
| Town & Gravets | 8 | 29 | 6 | 2 | 10 | | | | |
| Thampalagamuwa | 140 | 436 | 3 | 126 | 394 | 1 | 14 | 42 | T/Aathi Koneswara Vidyalayam |
| Morawewa | 9 | 28 | 2 | 3 | 8 | | | | |
| Seruwila | 110 | 405 | 4 | | | | | | |
| Verugal | 15 | 40 | 7 | 2 | 2 | | | | |
| Muthur | 750 | 2485 | 11 | 180 | 711 | | | | |
| Kinniya | 1600 | 3800 | 11 | 120 | 420 | | | | |
| Gomarankadawela | 5 | 22 | | | | | | | |
| PadaviSripura | 42 | 131 | 3 | | | | | | |
| Total | 2679 | 7376 | 47 | 433 | 1545 | 1 | 14 | 42 | |

**(ஏ.எச்.ஹஸ்பர்)**

சீரற்ற கால நிலையால் திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 2,679 குடும்பங்களைச் சேர்ந்த 7,376 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் ஒன்பது பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கிய பகுதிகளில் நேற்று மதியம் 12.30 வரையான தகவலின் அடிப்படையில் இவ்விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 47 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட 433 குடும்பங்களை சேர்ந்த 1,545 பேர் உறவினர்கள் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் – 08, தம்பலகாமம் – 140, மொறவெவ – 09, சேருவில – 10, வெருகல் – 15, மூதூர் – 750, கிண்ணியா – 1,600, கோமரங்கடவல – 05, பதவிஸ்ரீபுர – 42 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். தம்பலகாமம் பிரதேச செயல பிரிவில் ஆதிகோணேஸ்வரா பாடசாலை இடைத்தங்கல் முகாமில் 14 குடும்பங்களை சேர்ந்த 42 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# ரன்தம்பே மின் பரிமாற்ற மார்க்கத்தின் கோளாறு காரணமாக மின் தடை

ரன்தம்பே மற்றும் மஹியங்கனை இடையே உள்ள 132 கிலோவோட் மின் பரிமாற்ற மார்க்கத்தில் கோளாறு ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக, மஹியங்கனை, அம்பாறை மற்றும் வவுணத்தீவு ஆகிய உப மின் நிலையங்களுக்கான மின்சாரம் தடைப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோளாறைச் சரிசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், விரைவில் மின் விநியோகம் வழமைக்குத் திரும்பும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.





# மண்சரிவு அபாய உச்ச எச்சரிக்கை

தற்போது நிலவும் மழையுடனான சீரற்ற வானிலை காரணமாக, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் ஏழு மாவட்டங்களுக்கு மூன்றாம் நிலை சிவப்பு மண்சரிவு அபாய முன் எச்சரிக்கையை விடுத்துள்ளது.

அதன்படி,பதுளை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, மொனராகலை, மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களில் அபாயம் நிறைந்த பகுதிகளில் வசிப்போர் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற வேண்டும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

# ஜனாதிபதி 3ஆம் திகதி யாழ்.வருகை

(ந.லோகதயாளன்)

வரும் டிசம்பர் 3ஆம் திகதி யாழ்ப்பாணம் திருவள்ளுவர் மண்பாட்டு மையத்தில் இடம்பெறும் நிகழ்வில் பங்குபற்றுவதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா யாழ் வருகை தரவுள்ளார்.

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் டிசம்பர் 3ஆம் திகதி ஆகும். அதை ஒட்டிய பிரதான அரச நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் இடம்பெறும் அந்த நிகழ்வில் பங்குகொள்ளவே ஜனாதிபதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு யாழ்ப்பாணம் பிரதான பஸ் நிலையத்தின் முன்பாகவிருந்து புறப்படும் ஊர்வலம் மண்டபத்தை வந்தடையும். அதன் பின்னர் மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெறும். யாழ். மாவட்டச் செயலகம் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.







# மோசமான காலநிலையால் பதுளையில் 31 பேர் மரணம்!

## மடுல்சீமை மண்சரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய், 3 வயது சிறுவன் உள்ளிட்ட ஐவர் பலி











(ந.மலர்வேந்தன்)

பதுளை மாவட்டத்தில் அடை மழை, மண்சரிவு உள்ளிட்ட அனர்த்தங்களால் கடந்த இரு நாட்களில் மட்டும் 31 பேர் பலியாகியுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பதுளை, ஹிந்தகொட, மடுல்சிமை ஆகிய பகுதிகளில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

மடுல்சீமை – பட்டாவத்த தோட்டத்தில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய், மூன்று வயது சிறுவன் உள்ளிட்ட ஐவர் பலியாகியுள்ளனர்.









# வடக்கில் அதிக குளங்கள் வான பாய்கின்றன

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக, வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஆளுகைக்கு உட்பட்ட 54 மிகப் பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களில் 21 குளங்கள் வான்பாயும் நிலையில் உள்ளனென வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் எந்திரி த.இராஜகோபு தெரிவித்தார்.

வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, குளங்களின் நீர்மட்ட விவரங்கள் பின்வருமாறு:-

# வான் பாயும் நிலையில் உள்ள குளங்கள் - 21

# 75 முதல் 100 வீதம் வரை கொள்ளளவில் உள்ளவை - 07

# 50 முதல் 74 வீதம் வரை கொள்ளளவில் உள்ளவை - 07

# 25 முதல் 48 வீதம் வரை கொள்ளளவில் உள்ளவை - 12

# 25 வீதத்திலும் குறைந்த கொள்ளளவில் உள்ளவை - 05

இதேவேளை, மாகாணத்தின் முக்கிய நீர்த்தேக்கங்களான இரணைமடு குளம் 37.13 வீதம் கொள்ளளவையும், வவுனிக்குளம் 42 வீதம் கொள்ளளவையும், முத்துஐயன்கட்டுக்குளம் 48 வீதம் கொள்ளளவையும் கொண்டுள்ளன.

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ள போதிலும், வவுனியா பகுதியில் நேற்றுக் காலை 7.00 மணி முதல் அதிகபடியான மழைவீழ்ச்சியாக 163 மி.மீ பதிவாகியுள்ளது. வவுனியா மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலங்களில் 172 மி.மீ மழைவீழ்ச்சியும், சேமமடுவில் 58 மி.மீ மழைவீழ்ச்சியும், முல்லைத்தீவு தண்ணிமுறிப்பில் 101 மி.மீ மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளன.

இந்த அதிகளவான மழைவீழ்ச்சி காரணமாக, வவுனியா மாவட்டத்திலுள்ள பம்பைமடு நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் சடுதியாக உயர்வடைந்தது. இதன் உயர் வெள்ள மட்டமானது (அதி கூடிய வான் பாயும் அளவு) 16 அங்குலமாக காணப்பட்ட போதும், தற்போதைய அதிக மழையால் 25 அங்குலமாக வான் பாய்ந்தது. இதனால் குளம் உடைப்பெடுக்கும் அபாயத்தைக் குறைப்பதற்காகவும், குளத்தின் பாதுகாப்பை உறுதி செய்யவும் வான் வழிவாய்க்காலுக்கான தடுப்பணையின் ஒரு பகுதி வெட்டப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தின் அலியா-மருதமடு குளம் 10 அங்குல அளவிலும், கல்மடு குளம் 1 அடியும் வான் பாய்வதுடன், முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

நீர்ப்பாசனத் திட்டங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக திணைக்களத்தின் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலர்கள் தொடர்ந்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என நீர்ப்பாசனப் பணிப்பாளர் தெரிவித்தார்.

# நுவரெலியாவின் 4 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவுக்கான சிவப்பு அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது

(மஸ்கெலியா விசேட நிருபர்)

நுவரெலியாவின் 4 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு சிவப்பு அறிவிப்புகள் விடுக்கப்பட்டுள்ளன. இப்பிரதேசங்களின் பொதுமக்களை விழிப்புடன் இருக்குமாறு மாவட்டச் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நுவரெலியா மாவட்டச் செயலாளர் துஷாரி தென்னகோன், நிலவும் பாதகமான வானிலை குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு கோருகின்றார்.

வலப்பனை, நில்தண்டஹின்ன, மதுரட்ட மற்றும் ஹங்குராந்தெத பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவுக்கான சிவப்பு அறிவிப்புகளை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தின் பல பகுதிகளில் வெள்ளம், மண்சரிவுடன் மற்றும் மரங்கள் விழுந்து கிடக்கின்றன. நுவரெலியாவின் வலப்பனை, முன்வத்த பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவுகளில் 04 பேர் உயிரிழந்துள்ளனர் என மாவட்டச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இந்த அனர்த்தத்தால் மாவட்டத்தில் 171 குடும்பங்களைச் சேர்ந்த 613 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.மேலும் 84 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

தடைபட்ட சாலைகளை சீரமைக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவும் தேவையான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நாள்களில் நுவரெலியாவிற்கு மக்கள் வருகை தர வேண்டாம் என்றும், வந்திருப்பவர்கள் பேரிடர் நிலைமை தீரும் வரை பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும் மாவட்ட செயலாளர் கேட்டுக்கொள்கிறார்.



# பல இடங்களிலும் சிவாஜிலிங்கம் அஞ்சலி

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நேற்று யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் மாவீரர்களுக்கு சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

நேற்றுக் காலை தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதல் மாவீரர் சங்கருக்கு கம்பர்மலையில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து குட்டிமணி மற்றும் தங்கத்துரை ஆகியோருக்கும் அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத்தூபியிலும், மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு அமைந்துள்ள நினைவாலயத்திலும் சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் விதைக்கப்பட்ட வித்துக்களுக்கு அஞ்சலி செலுத்தினார். கோப்பாய் மாவீரர் துயிலுமில்ல வளாகத்தில் இராணுவத்தின் படைமுகாம் அமைக்கப்பட்டுள்ளதால் இராணுவ முகாம் முன்பாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்துதமிழினவிடுதலைப்போராட்டத்தில் உயிர் நீத்த தியாகி பொன் சிவகுமாரனின் உரும்பிராயில் உள்ள நினைவு தூபிக்கும் சென்று அஞ்சலி செலுத்தினர்.

சாவகச்சேரியில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவிடத்திலும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில் விதைக்கப்பட்ட வித்துக்களுக்கு அஞ்சலி செலுத்தினார். அங்கு மாவீரர் துயிலுமில்ல வளாகத்தில் இராணுவத்தின் படைமுகாம் அமைக்கப்பட்டுள்ளதால் இராணுவ முகாம் முன்பாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவீரர் மில்லரின் நினைவாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் முன்பாக ஈகை சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் விதைக்கப்பட்ட வித்துக்களுக்கு சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அங்கும் துயிலுமில்ல வளாகத்தில் இராணுவத்தின் படைமுகாம் அமைக்கப்பட்டுள்ளதால் இராணுவ முகாம் முன்பாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

வல்வெட்டித்துறை கடற்கரையில் கடலில் காவியமான மாவீரர்களும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

# எங்களைத் தமிழ்த் தேசியக் கொள்கை வழியில் வழிநடத்துபவை மாவீரர்களின் தியாகங்கள்தான்

## நினைவேந்தலில் தவிசாளர் நிரோஸ் உரை



மாவீரர்களின் தியாகத்தினாலேயே தமிழ் மக்களின் இருப்புதக்கவைக்கப்பட்டது என தவிசாளர் தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார். வலிகாமம் கிழக்கு பிரேதச சபையில் மேற்கொள்ளப்பபட்ட அஞ்சலி நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்கள் இந் நாட்டின் தேசிய இனமாக மரபுவழித் தாயகத்தில் வாழ்வதற்கான உரிமையினை இலங்கை அரசு மறுத்தது. மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்கள் மீது பௌத்த - சிங்களப் பேரினவாதத்தைக் கட்டவீழ்த்து விட்டபோது தமிழ்த் தலைவர்கள் ஜனநாயக ரீதியில் அந்த அடக்குமுறைக்கு எதிராகப் போராடினார்கள். தமிழ்த் தலைவர்கள் ஜனநாயக அடிப்படையில் போராடிய போது அப்போராட்டம் அரச படைகளால் ஆயத வன்முறை ஊடாக அடக்கப்பட்டது. அந்நிலையிலேயே ஆயுத வழியிலான விடுதலைப்போராட்டம் தோற்றம் பெற்று தமிழ் மக்களுக்கு என ஒரு தேசத்தினையும் தனியரசையும் இவ் உலகில் உருவாக்கவேண்டும் எனப் போராடி மகோன்னத தியாகத்தினை ஈடேற்றியவர்களாக மாவீரர்கள் மீளாத்துயில் கொள்கின்றனர்.

அவர்கள் இந்தத்தேசத்தில் தமிழ் மக்கள் விடுதலை அடையவேண்டும் என்பதற்காக உடல், பொருள், ஆவி அனைத்தினையும் அர்ப்பணித்த தியாக சீலர்களாகவுள்ளனர். மாவீரர்களின் தியாகம் அவர்களை தெய்வங்கள் என்ற ஸ்தானத்திற்கு முன்னகர்த்தியுள்ளது. விடுதலைப் போராட்டம் அதன் தியாகங்கள் வாயிலாக தமிழ் மக்களின் இருப்பினை இந்தத்தேசத்தில் பாதுகாத்துள்ளது. சர்வதேசமயப்படுத்தியுள்ளது. தியாகங்களே எம்மை இலட்சியத்தினால் ஒன்றுபடுத்துகின்றன. நாம் இன்றும் எமது உரிமைகளை ஜனநாயக ரீதியில் வென்றெப்பதற்கு மாவீரர்கள் மீது உறுதியுரைத்து இலட்சியத்தினால் ஒன்றுபட்டவர்களாக அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும். எமது தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமையினை நாம் எச்சந்தர்ப்பத்திலும் விட்டுக்கொடுக்க முடியாது. ஓர் இனமாக சகல அரசியல் இடைவெளிகளையும் கடந்து தமிழ்த் தேசிய கொள்கை ஒருமிப்புடன் நாம் செயலாற்ற வேண்டியவர்களாக இருக்கின்றோம். அத் தியாகத்தினை மாவீரர்களது தியாகங்கள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன. - என்றார்.








# பாவற்குளத்தின் நான்கு வான்கதவுகள் திறப்பு: மக்களை அவதானமாக இருக்கக் கோரிக்கை

(கி.வசந்தன்)

பாவற்குளத்தின் நீர்மட்டம் தொடர்ந்தும் அதிகரித்து வருவதானால் அதன் 4 வான் கவுகள் திறக்கப்பட்டுள்ளன. அதனால், அதன் கீழ் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களை தொடர்ந்தும் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

வவுனியாவில் தொடர்ந்தும் கடும் மழை பெய்து வருவகின்றது. இதன் காரணமாக பல குளங்களின் நீர் மட்டம் அதிகரித்து வான் பாய்ந்து வருவதுடன் பாவற்குளத்தின் நீர்மட்டமும் சடுதியாக அதிகரித்துள்ளது.

பாவற்குளத்தின் நீர்மட்டமானது அதன் கொள்ளவான 19.4 அடியை தாண்டி 20.3 அடியை அடைந்துள்ளதால், அதன் நான்கு வான் கதவுகளும் 2 அடிக்கு திறக்கப்பட்டுள்ளன.

அத்துடன், தொடர்ந்தும் மழை பெய்து வருவதனால் மேலும் வான் கதவுகள் ஊடாக நீர்பாயும் வீதத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

இதனால் பாவற்குளத்தின் நீர் வழிந்தோடும் பகுதிகளில் உள்ள கந்த சாமி நகர், கிறிஸ்தவகுளம், பாவற்குளம் படிவம் 5,6,4,2,1, பீடியாபாமின் வேப் பங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் அவதானமாகவும், முன்னெச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும்.

அத்துடன், நெளுக்குளம் – நேரியகுளம் வீதி ஊடான போக்குவரத்தும் தடைப் பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

# கொக்குதொடுவாய் பிரதேசத்தில் வெள்ளத்தில் சிக்கிய 16 விவசாயிகள் படகுகள் மூலம் மீட்பு











(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கொக்குளாய், கருநாட்டுக்கேணி மற்றும் கொக்குதொடுவாய் பிரதேசத்தில் வெள்ளத்தில் அகப்பட்ட 16 விவசாயிகள் படகுகள் மூலம் மீட்கப்பட்டனர்.

இப் பகுதியில் வேலைக்குச் சென்ற விவசாயிகள் நெல் வயல்களுக்கு இரவு கண்காணிப்புப் பணிக்காகச் தங்கியிருந்தனர். இதன்போது திடீர் வெள்ளப் பெருக்கு காரணமாக, அவர்களால் திரும்பி வர முடியாத நிலை ஏற்பட்டது.

இவ. விடயம் கிராம மீனவர்கள் மற்றும் கொக்குத்தொடுவாய் சமூக சேவை மைய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து நேற்று பிற்பகல் சுமார் 2.30 மணியளவில் அனைவரும் படகுகள் மூலம் பாதுகாப்பாக மீட்கப் பட்டனர்.

# ஹொங்கொங் அடுக்குமாடி தீ விபத்து: பலி எண்ணிக்கை 55 ஆக அதிகரிப்பு



ஹொங்கொங் அடுக்குமாடி குடியிருப்பு கட்டடங்களில் ஏற்பட்ட தீ விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 55 ஆக அதிகரித்துள்ளது. 70 இற்கும் மேற்பட்டோர் பலத்த தீக்காயம் அடைந்த நிலையில், 279 பேரை காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹொங்கொங்கின் டய் போ பகுதியில் வாங் பக் கோர்ட் என்ற அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் 8 அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளன. ஒவ்வொரு அடுக்குமாடி குடியிருப்பும் 31 மாடிகளை கொண்ட கட்டிடங்களாகும். இங்குள்ள 2,000 இற்கும் மேற்பட்ட வீடுகளில் சுமார் 5,000 பேர் வசித்து வந்தனர். இங்கு, கடந்த சில மாதங்களாக பராமரிப்பு பணிகள் நடைபெற்று வந்தன.

இந்தச் சூழலில் கடந்த புதன்கிழமை பிற்பகலில் வாங் பக் கோர்ட் வளாகத்தில் தீ விபத்து ஏற்பட்டது. மூங்கில் சாரம், தார்பாலின் காரணமாக 8 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும் தீ மளமளவென்று பரவியது.

ஒரே நேரத்தில் 8 அடுக்குமாடி குடியிருப்புகளிலும் வானளாவிய உயரத்துக்கு தீப்பற்றி எரிந்தது. சுமார் 800 தீயணைப்பு படை வீரர்கள், 128 தீயணைப்பு லாரிகள் மூலம் தீயை அணைக்கும் பணி தீவிரமாக நடைபெற்றது. 20 மணி நேர போராட்டத்துக்குப் பிறகு தீ அணைக்கப்பட்டது. 1000 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். 100 இற்கும் மேற்பட்ட நோயாளர் காவு வண்டிகளை பயன்படுத்தப்பட்டன.

வாங் பக் கோர்ட் வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் இதுவரை 55 பேர் உயிரிழந்தனர். 8 தீயணைப்பு படை வீரர்கள் உட்பட 70 இற்கும் மேற்பட்டோர் பலத்த தீக்காயங்களுடன் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனிடையே, தீ விபத்து நிகழ்ந்த குடியிருப்புகளில் இருந்து இதுவரை 279 பேரை காணவில்லை. அவர்களை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அதேவேளையில், இந்த தீ விபத்து குறித்த விசாரணையும் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

# இந்தோனேசியாவில் வெள்ளப் பெருக்கு; நிலச்சரிவில் சிக்கி 49 பேர் உயிரிழந்தனர்



இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் ஏற்பட்ட திடீர் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி 49 பேர் உயிரிழந்தனர் என்றும், 67 பேரைக் காணவில்லை எனவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவின் வடக்கு சுமத்ரா மாகாணத்தில் கடந்த வாரம் பெய்த கனமழை காரணமாக நேற்று ஆறுகளில் கடுமையான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. வெள்ளப் பெருக்கால் 2,000 இற்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் கட்டடங்கள் மூழ்கின என்று தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனம் தெரிவித்துள்ளது.

தெற்கு தபனுலி மாவட்டத்தில் நேற்று 17 உடல்களும், சிபோல்கா நகரில் 8 உடல்களும் மீட்கப்பட்டன என வடக்கு சுமத்ரா மாகாண காவல் துறையின் செய்தித் தொடர்பாளர் ஃபெர்ரி வாலிண்டுகன் தெரிவித்தார்.

மத்திய தபனுலி மாவட்டத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் உயிரிழந்தனர் என்றும், பாக்பக் பாரத் மாவட்டத்தில் 2 பேரும், ஹம்பாங் ஹசுண்டுடான் மாவட்டத்தில் 2 பேர் மற்றும் நியாஸ் தீவில் ஒருவர் உயிரிழந்தனர் என வாலிண்டுகன் தெரிவித்தார்.

மேலும், சில தொலைதூரப் பகுதிகளை இன்னும் அடைய முடியவில்லை என்றும், இதனால் இறப்பு எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வடக்கு சுமத்ரா மாகாணத்தில் மழை தொடரும் என்றும், அடுத்த வாரம் வரை தீவிர மழை பெய்யும் அபாயம் தொடரும் எனவும் இந்தோனேசியாவின் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

வடக்கு சுமத்ரா மாகாணத்தில் வெள்ளத்தால் சுமார் 47,000 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். சுமார் 1,500 பேர் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மேற்கு சுமத்ரா மாகாண தலைநகர் படாங்கில் உள்ள லுமின் பார்க் குடியிருப்புப் பகுதியில் வெள்ளத்தில் மூழ்கிய 6 பேரின் உடல்களை மீட்புக் குழுக்கள் மீட்டதாக பேரிடர் மீட்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. படாங் பரியாமன் மாவட்டத்தில் 3,300 இற்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.

17,000 தீவுகளைக் கொண்ட இந்தோனேசியாவில், ஒக்டோபர் முதல் மார்ச் வரை பெய்யும் பருவ மழையால் அடிக்கடி வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச்சரிவுகள் ஏற்படுகின்றன.

# த.வெ.க. மாநில நிர்வாகக் குழுவில் செங்கோட்டையனுக்கு முக்கிய பதவி

## விஜய் அறிவிப்பு



த.வெ.க. உயர்மட்ட மாநில நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளராக செங்கோட்டையன் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என அக்கட்சியின் தலைவர் விஜய் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"தமிழ்நாட்டின் இருபெரும் தலைவர்களோடு பயணித்தவர், தாம் சார்ந்திருந்த கட்சியின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றியவர், அனைவரிடத்திலும் எளிமையோடும் அன்போடும் பண்போடும் பழகி, நன்மதிப்பைப் பெற்றவர் மூத்த அரசியல் தலைவர், முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன்.

இன்று முதல் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்து, மக்களுக்கான அரசியலில் நம்மோடு பயணிக்க இருக்கிறார். அவரை வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். செங்கோட்டையன் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட 28 பேர் கொண்ட எனது கண்காணிப்பில் இயங்கும் த.வெ.க. உயர்மட்ட மாநில நிர்வாகக் குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

இவர் இந்தக் குழுவை வழிநடத்தி கட்சியின் அரசியல் செயல்பாடுகளை முன்னெடுக்க எனக்கு உறுதுணையாகச் செயல்படுவார். மேலும் கூடுதலாக ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களுக்கு அமைப்புச் செயலாளராகவும் நியமிக்கப்படுகிறார்.

என்னோடும், கட்சியின் பொதுச் செயலாளர் என்.ஆனந்தோடும் கலந்தாலோசித்து கட்சிப் பணிகளை மேற்கண்ட இம்மாவட்டங்களில் மேற்கொள்வார்.

மேலும், அவருடன் தமிழக வெற்றிக் கழகத்தில் தங்களை இணைத்துக்கொண்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சத்தியபாமா, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் வெங்கடாசலம், முத்துக்கிருஷ்ணன் மற்றும் பிற புதிய உறுப்பினர்களையும் வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கட்சியின் நிர்வாகிகள் இவர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்" என்று விஜய் குறிப்பிட்டுள்ளார்.

# இன்று தி.மு.கவும் அ.தி.மு.கவும் வேறு வேறு அல்ல; முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் விமர்சனம்




இன்று தி.மு.க வேறு, அ.தி.மு.க. வேறு அல்ல. இரண்டும் ஒன்றாக இணைந்துதான் பயணத்தை மேற்கொண்டு வருகின்றன என்பதை நாடறியும் என்று தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்த முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்தார்.

த.வெ.க. தலைவர் விஜய் முன்னிலையில் அக்கட்சியில் இணைந்த கே.ஏ. செங்கோட்டையன், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர் தெரிவிக்கையில்,

"அ.தி.மு.கவில் எம்.ஜி.ஆரால் நான் அடையாளம் காட்டப்பட்டவன். அப்போது இந்த கட்சி 100 நாள்கள் கூட நீடிக்காது என்று எதிர்கட்சிகள் சொன்னர்கள். ஆனால் அண்ணாவால் பாராட்டப்பட்டவர் எம்.ஜி.ஆர். அந்த தலைவர் மறைந்த போது அ.தி.மு.க. இரண்டாக உடைகிற சூழல் எழுந்தபோது ஜெயலலிதாவின் வழியில் நான் என் அரசியல் பயணத்தை மேற்கொண்டேன்.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு காலச்சூழல் காரணமாக மூன்று கூறுகளாக அ.தி.மு.க. பிரிந்தது. எல்லாரும் ஒன்றினைய வேண்டும் என்றுதான் கருத்துகளை வெளிப்படுத்தினோம். ஆகவே இன்றைய சூழலில் நான் சொல்ல விரும்புவது,'நானென்றுஒருவன்நினைத்தான், ஆண்டவன் தானென்று பார்த்துக் கொள்வார்.

ஒரு தூய்மையான ஆட்சி தமிழகத்தில் மலர்வதற்கு தமிழக வெற்றிக் கழகம் என்ற மாபெரும் ஒரு இயக்கத்தை உருவாக்கி மக்கள் மனதில் இடம் பிடித்துள்ளார் விஜய். தமிழகத்தில் ஒரு மாற்றம் வேண்டும். இவர்கள் மட்டும்தான் ஆள வேண்டுமா? என்ற எண்ணம் மக்கள் மனதில் எழுந்துள்ளது. எல்லாம் மாநிலங்களிலும் மாற்றம் உருவாகிக் கொண்டிருக்கிறது. 2026 தேர்தலில் மக்களால் மாபெரும் புரட்சி உருவாகி வெற்றி என்ற இலக்கை விஜய் எட்டுவார்." என்று தெரிவித்துள்ளார்.

# தமிழர் தேசமெங்கும் மாவீரர் தின நிகழ்வுகள்

## யாழ் பல்கலையில்....



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வில் மாணவர்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.











# கோப்பாயில்...

யாழ்ப்பாணம் , கோப்பாய் துயிலுமில்லத்திற்கு அருகில் இடம்பெற்ற மாவீரர் நாள் நினைவேந்தலில் மூன்று மாவீரர்களின் தாயான நடேசு தவமணி பொது சுடரினை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து கூடியிருந்த மக்கள் விளக்கேற்றி மாவீரர்களை அஞ்சலித்து ஆராதித்தனர்.



















# நல்லூரில்.....

யாழ்ப்பாணம், நல்லூர் மாவீரர் நினைவலையத்தில் நேற்று மாலை இடம்பெற்ற மாவீரர் நாள் நினைவேந்தலில் மாவீரர் கப்டன் பண்டிதரின் தாயார் பொது சுடரினை ஏற்றி வைத்தார்.

பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் இந்த நிழ்வில் பங்கு கொண்டு உணர்வெழுச்சியுடன் மாவீரர்களை நினைவு கூர்ந்து அஞ்சலித்தனர்.

மாலை 06.05 க்கு மணி ஒலிக்க, 06.06 க்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு, பொதுச் சுடர் ஏற்றப்பட்டு துயிலும் இல்ல கீதம் ஒலிக்கப்பட்டது. இதன்போது மண்ணின் விடுதலைக்காக வித்தாகியோரது பெற்றோரும், உரித்துடையோரும் கண்ணீர் விட்டு அழுதமையை அவதானிக்க முடிந்தது. நல்லூர் வளாகத்தில் அமைக்கப்பட்ட மாவீரர்களின் கல்வெட்டுகளையும் மக்கள் பார்வையிட்டனர்.



















# பருத்தித்துறை நகரில்......

மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு பருத்தித்துறை நகரில் மிகவும் எழுச்சி-பூர்வமாக இடம்பெற்றது.

பருத்தித்துறை நகரசபை தரப்பின் ஏற்பாட்டில் பருத்தித்துறை நகர் வாழ் மக்கள் இணைந்து முன்னெடுத்த நிகழ்வில் மாலை 6.07 மணிக்கு மாவீரரின் பெற்றோர் பொதுச்சுடரை ஏற்றிவைக்க, மூன்று மாவீரர்களை பெற்றெடுத்த தாய் ஒருவர் மாவீரர்ரகளின் படத்துக்கு மாலை அணிவிக்க, மாவீரர்களின் உரித்துடையோர் உள்ளிட்ட பொது மக்கள் ஈகைச் சுடர்களை ஏற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

சுமார் 20 ஆண்டுகளுக்கு பின்னர் பருத்தித்துறை நகரில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் நூற்றுக்கணக்கான மக்கள் உணர்வெழுச்சியுடன் பங்கேற்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.























# சாவகச்சேரியில்......

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் பேருந்து நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்ட தற்காலிக மாவீரர் நினைவிடத்தில் 27/11 வியாழக்கிழமை பிற்பகல் மாவீரர்களுக்கு ஈகைச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.








# கொடிகாமத்தில்...

யாழ்ப்பாணம் , கொடிகாமம் துயிலு மில்லத்தின் முன்பாக இடம்பெற்ற மாவீரர் நாள் நினைவேந்தலில் மாவீரர் மேரியனின் தாயான கந்தையா நாக ராணி பொது சுடரினை ஏற்றி வைத்தார்.

பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் திரண்டு இந்நிகழ்வில் பங்கு பற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத் தினர்.











# தமிழ் அரசு தலைமையகத்தில்...

யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியில் உள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று மாலை 4.00 மணியளவில் மாவீரர் நாள் நினைவு கூரல் நிகழ்வு கட்சியின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசாவும் கலந்து கொண்டு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் தொகுதிக் கிளையின் தலைவர் எஸ்.சிறில், செயலாளர் இ.ஆனல்ட், மாநகர பிரதி முதல்வர் இ.தயாளன், கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.









# வடமராட்சி கிழக்கு உடுத்துறையில்...

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் நிகழ்விக் நேற்று மாலை 6:05 மணியளவில் மணியோசை இசைக்கப்பட்டு மச்ல்சி 6:06ற்கு பொதுச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப் பட்டது.

பின்னர் பொது நினைவேந்தல் பிரதான கல்லில் மலர் மாலை போடப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது

இவ் நினைவேந்தல் நிகழ்வில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து மாவீரர் களின் பெற்றோர், உரித்துடையோர், பொது மக்கள், இளைஞர்கள் சிறுவர்கள், முன்னாள் மாகண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், அருட்தந்தைகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.










# கட்டைக்காடு சென்மேரிஸ் வி.கவில்...

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டுக்கழக பொது மண்டபத்தில் நேற்று மாவீரர் நினைவொலி எழுப்பப்பட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டன

ஈழப் போரில் மக்களுக்காக உயிர்நீத்த சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த மாவீரர்களுக்கும், ஏனைய மாவீரர்கள் மற்றும் மக்களுக்குமாக ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தனித் தாயகம் கோரிய விடுதலைப் போராட்டத்தில் தன்னுயிர் கொடுத்த வீர மறவர்களை நினைவேந்தி பொதுப் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு மாவீரர் திருவுருவப்படங்களிற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டு பொதுச்சுடர் ஏற்றி நினைவேந்தப்பட்டது

வீர மரணம் கண்ட மாவீரர்களை கண்ணீரோடு மக்கள் அஞ்சலித்தனர்.

சீரற்ற காலநிலைக்கு மத்தியில் துயிலும் இல்லம் செல்ல முடியாத மக்கள் ஒன்று திரண்டு இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சென்மேரிஸ் விளையாட்டுக் கழக தலைவர் பி.அலஸ்ரன் தலைமையில் இந்த அஞ்சலி நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.











# தீவகம், சாட்டியில்...

யாழ்ப்பாணம் , தீவகம் சாட்டி துயிலுமில்லத்தில் நேற்று மாலை இடம்பெற்ற மாவீரர் நாள் நினைவேந்தலில் மூன்று மாவீரர்களின் தந்தையான செல்லர் அருளம்பலம் பொது சுடரை ஏற்றி வைத்தார்.














# கிளிநொச்சி - கனகபுரத்தில்...

கிளிநொச்சி, கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாலை மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு கொட்டும் மழைக்கு மத்தியிலும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் சகோதரர் மூர்த்தி, பொதுச்சுடரை ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றியிருந்தனர்.












# அளம்பிலில்....

**(விஜயரத்தினம் சரவணன், பா.சதீசன்)**

மழையுடன் கூடிய சீரற்ற கால நிலையின் மத்தியிலும் முல்லைத்தீவு – அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் இடம் பெற்றறது.

இந்த மாவீரர் நாள் நினைவேந்தலில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றார்.

குறிப்பாக அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில் சரியாக 06.5மணிக்கு மணி ஓசை எழுப்பப்பட்டதுடன் மாவீரர்களுக்கான பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. அந்த வகையில் பொதுச்சுடரினை இரண்டு மாவீரர்களின் தாயாரான பண்டியன் ஞான உதயம் ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து ஏனைய சுடர்களும் ஏற்றப்பட்டு மாவீரர்நாள் நினைவேந்தல் செயற்பாடுகள் உணர்வெழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்டன.












# தம்பலகாமத்தில்....

திருகோணமலை, தம்பலகாமம் நான்கு வாசல் பிள்ளையார் ஆலய முன்றிலில் தம்பலகாமம் இளைஞர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு நேற்று கொட்டும் கனமழையிலும் இடம் பெற்றது.

வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவு கூர்ம்ம் முகமாக சுடரேற்றப்பட்டு உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழினத்தின் விடுதலைக்காக போராடி உயிர்த் தியாகம் செய்த மாவீரர்களை இந்த நேரத்தில் அக வணக்கத்துடன் இயற்கையின் பேரிடரை கூட பாராமல் நினைவேந்தலை இளைஞர்கள் முன்னெடுத்தனர்.










# ஈச்சங்குளத்தில்....

(கி.வசந்தன்)

கொட்டும் மழைக்கு மத்தியில் வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள நிலையில் அதற்கு அருகாமையில் உள்ள மைதானத்தில் இந்த மாவீரர் நாள் நிகழ்வு உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது..

கடும் மழைக்கு மத்தியிலும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு தமது உறவுகளுக்கு அஞ்சலியைச் செலுத்தியிருந்தனர்.



# மன்னார் ஆள்காட்டிவெளியில்....

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

தமிழ் மக்களின் விடுதலைக்காக தம் உயிரை தியாகம் செய்த வீரர்களை நினைவு கூரும் 'மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வு' நேற்று மாலை மன்னார் ஆள்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் கொட்டும் மழையிலும் மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மாலை 6.05 மணியளவில் மாவீரர் ஒருவரின் தாயினால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டது.

அதனை தொடர்ந்து மாவீரர்களின் உறவினர்கள், பெருந்திரளான மக்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் என ஆயிரக்கணக்கானவர்கள் ஒன்று திரண்டு கண்ணீர் மல்க உணர்வுபூர்வமாக மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.














# கிளிநொச்சி சமத்துவக் கட்சி அலுவலகத்தில்...

கிளிநொச்சி சமத்துவக் கட்சி அலுவலகத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகள் முன்னாள் போராளிகளின் ஏற்பாட்டில் நேற்று மாலை உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

கட்சியின் மாவட்ட அமைப்பாளரும், முன்னாள் அரசியல்துறை போராளியுமான வேங்கை தலைமையில் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் மாவீரர்களான ஒளிவேங்கை மற்றும் ஒளியழகு ஆகியோரின் தாயார் பொதுச்சுடரை ஏற்றி வைக்க ஏனைய சுடர்களும் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. மண்ணுக்காய் மரணித்தவர்கள் நினைவு கூரப்பட்டனர்.

இந் நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கட்சியின் அமைப்பாளர்கள், முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கலந்துகொண்டனர்.












# மட்டு. மாவடிமுன்மாரி துயிலுமில்லத்தில்...

மட்டக்களப்பு மாவடிமுன்மாரி துயிலுமில்லத்தில் உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் நினைவேந்தல்கள் நேற்று இடம்பெற்றன.

மாவடிமுன்மாரி துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள், முன்னாள் போராளிகள், பொதுமக்கள், அரசியல்வாதிகள் என பெரும் எண்ணிக்கையானவர்கள் கொட்டும் மழைக்கு மத்தியிலும் உணர்வுபூர்வமாக ஒன்று திரண்டு தமிழ் மக்களின் உயரிய இலட்சியத்திற்காக தங்களின் இன்னுயிர்களை தியாகம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அந்த வகையில் துயிலுமில்ல வளாகத்தில் மாலை 6.05 மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டு பின்னர் பிரதான பொதுச்சுடர் இரண்டு மாவீரர்களின் தாயாரான வள்ளிபுரம் பூமணியினால் ஏற்றி வைக்க ஏனைய சுடர்களை மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் ஏற்றி வைக்கப்பட்டன.

தொடர்ந்து துயிலுமில்ல பாடல் ஒலி பரப்பாகியது. இதன் போது மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் கலந்து கொண்டவர்கள் மிகவும் அமைதியாக கண்ணீர் மல்க மாவீரர்களை நினைவு கூர்ந்ததனர். பெருந்திரளான பொதுமக்கள் உணர்வெழுச்சியுடன் கலந்து கொண்டு அஞ்சலியைச் செலுத்தி இருந்தனர்.







# முள்ளியவளையில்.....

(பா.சதீசன்)

தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடி மடிந்த வீரர்களை நினைவுகூரும் வகையில் கொட்டும் மழைக்கு மத்தியில் உணர்வெழுச்சியுடன் முல்லைத்தீவு முள்ளியவளை துயிலுமில்லத்தில் மாவீரர் அஞ்சலி நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

குறித்த அஞ்சலி நிகழ்வில் மூன்று மாவீரர்களின் தாயார் செல்லத்துரை யம்மா பொதுச்சுடரினை ஏற்றிவைத்தார்.



















# கஞ்சிகுடிச்சாறில்...

நாடளாவிய ரீதியில் சீரற்ற வானிலை நிலவுகின்றபோதிலும் கொட்டும் மழைக்கும் மத்தியில் அம்பாறை, திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

மாலை 6.05 நிமிடத்தில் மாவீரர்களுக்கான பொதுச் சுடர் ஏற்றி வைக்க ஏனைய சுடர்களை மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கி ஏற்றி வைத்தனர்.

மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள், முன்னாள் போராளிகள், பொது மக்கள், அரசியல்வாதிகள் என பெருந்–திரளானவர்கள் கொட்டும் மழைக்கு மத்தியிலும் உணர்வுபூர்வமாக ஒன்று திரண்டு தமிழ் மக்களின் உயரிய இலட்சியத்திற்காக தங்களின் இன்னுயிர்களை தியாகம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து துயிலுமில்ல பாடல் ஒலிபரப்பாகியது. இதன் போது மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் கலந்து கொண்டவர்கள் மிகவும் அமைதியாக கண்ணீர் மல்க மாவீரர்களை நினைவு கூர்ந்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு மாவீரர் துயிலும் இல்லம் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள கஞ்சிகுடிச்சாறு பிரதேசத்தில் அமைந்துள்ளது. அம்பாறை மாவட்டத்தில் 700க்கும் மேற்பட்ட மாவீரர்களின் நினைவுச்சுடர்கள் இங்கு நிறுவப்பட்டுள்ளன.கஞ்சிகுடிச்சாறு மாவீரர்கள் துயிலும் இல்லத்தில் கடந்த 1993ஆம் ஆண்டு தொடக்கம் 2006ஆம் ஆண்டுவரை தமிழீழ விடுதலைப் புலிகளினால் தீபம் ஏற்றி நினைவேந்தல் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டு வந்துள்ளது.













# ஆலங்குளத்தில்.....

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை,ஆலங்குளம்மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாலை மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வுகள் கொட்டும் மழைக்கு மத்தியில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் பங்குபற்றினர்.











# இரணைப்பாலையில்......

(பா.சதீசன்)

தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடி மடிந்த வீரர்களை நினைவு கூரும் வகையிலல் கொட்டும் மழைக்கு மத்தியில் உணர்வெழுச்சியுடன் முல் லைத்தீவு இரணைப்பாலை துயிலு மில்லத்தில் மாவீரர்களுக்கான அஞ் சலி நிகழ்வு நேற்று மாலை இடம் பெற் றது.

இந்த அஞ்சலி நிகழ்வில் மாவீரர் டிசாந்தியின் தந்தை கணேஸ் பொதுச்சுடரை ஏற்றினார்.











# கோடாலிக்கல்லு களிக்காட்டில்.....

(பா.சதீசன்)

கொட்டும் மழைக்கு மத்தியில் உணர்வெழுச்சியுடன் முல்லைத்தீவு கோடாலிக்கல்லு களிக்காடு துயிலு மில்லத்தில் அஞ்சலி நிகழ்வானது அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த அஞ்சலி நிகழ்வில் லெப்டி னன்ட் கேணல் நவம் (டடி) அவர்களின் சகோதரிகள் மூன்று பேர் பொதுச்சுடரை ஏற்றினார்கள்.














# வவுனியா தமிழரசுப் பணிமனையில்...

இலங்கைத் தமிழரசு கட்சியின் வவுனியா மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் மாவீரர் தின நிகழ்வு நேற்று மாலை கட்சியின் வவுனியா மாவட்ட தாயகம் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஈகைச்சுடர் ஏற்றப்பட்டதுடன், பிரதான திருவுருவ படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு, மலர் அஞ்சலியும் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து கட்சி முக்கியஸ்தர்கள் மற்றும் பொதுமக்களால் பிரதான திருவுருவ படங்களுக்கு தீப மேற்றியும் மலர்தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.














# மட்டு. தாண்டியடியில்.....

மட்டக்களப்பு மாவட்டம் தாண்டியடி துயிலுமில்லத்தில் இடம்பெற்ற மாவீரர் நாள் நினைவேந்தலில் தமிழ் மக்கள் உணர்வெழுச்சியுடன் பங்குபற்றினர்.













